மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், ஓட்டப்பிடாரம்.

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII,Cr.P.C)

| | | |
|---|---|---|
| வழக்கு எண். | : | CC 317/23 |
| பெயர் | : | விஜயா (PW2) |
| க/பெ. | : | பெருமாள்சாமி |
| வயது | : | |
| கிராமம் | : | |
| தாலுகா | : | |
| Calling | : | |

(Accused Kuttiraj is present. )

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 13 th day of February 2025

<u>முதல் விசாரணை</u>

1)நான் ஜம்புலிங்கபுரத்தில் வசிக்கிறேன்.நான் கூலி வேலை செய்கிறேன்.அசா1 என் கணவர்.சாட்சி அஸ்வின் என் மகளின் மகன் , என் பேரன்.ஆஜர் எதிரி குட்டிராஜை தெரியும் அவர் என் பக்கத்து வீட்டுக்காரர்.

2)20.09.2022 அன்று மாலை 6.30 மணிக்கு என் பேரன் பள்ளிக்கு சென்றுவிட்டு வந்து மொட்டை மாடியில் விளையாடிக் கொண்டிருந்தார்.என் பேரன் ஆஜர் எதிரி வீட்டை எட்டிப்பார்த்தாக எதிரியின் மனைவியும் , மகளும் வந்து சத்தம் போட்டார்கள்.நான் என் பேரனை சத்தம் போட்டு வைக்கிறேன் இனி எட்டிப்பார்க்க மாட்டான் என்று சொல்லிக்கொண்டிருக்கும்போது ஆஜர் எதிரி மது போதையில் வந்து தேவிடியா மகளே , கூதி மகளே என்று அசிங்கமாக பேசி ஓடி வந்து நெஞ்சில் மிதித்து தள்ளிவிட்டதில் நான் கீழே விழுந்துவிட்டேன்.அதில் என் வலது பக்க இடுப்பு எலும்பு முறிந்துவிட்டது. மறுபடியும் என் இடுப்பில் ஏறி மிதித்தார்.நான் மயங்கிவிட்டேன்.எதிரியின் மனைவியும் மகளும் எதிரியை தடுத்தார்கள்.என் பேரன் என் மகளுக்கு போன் செய்து சொல்லி என் மகள் வந்து எதிரியை சத்தம் போட்டார்.எதிரி என் மகளிடமும் சண்டைக்கு சென்றார்.எனக்கு வலி அதிகமாக இருந்ததால் ஓட்டப்பிடாரம் அரசு மருத்துவமனைக்கு சென்று ஊசிப்போட்டுவிட்டு 108 ஆம்புலன்சில் தூத்துக்குடி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சென்றேன்.7 நாட்கள் கழித்து போலிசார் என்னை விசாரித்தனர்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1) என் வீட்டிற்கும் ஆஜர் எதிரியின் வீட்டிற்கும் ஒரே சுவர் என்றால் சரிதான்.என் பேரன் புதியம்புத்தூர் பள்ளியில் அப்போது எட்டாம் வகுப்பு படித்து

கொண்டிருந்தார்.பொதுவாக என் பேரன் பள்ளியில் இருந்து அவரது அம்மா போனை வாங்கி கேம் விளையாடுவார் என்றால் சரிதான்.நாங்கள் சத்தம் போடுவதால் மொட்டை மாடி சென்று கேம் விளையாடுவார் என்றால் சரிதான்.

2)குட்டிராஜ் மகளை போட்டோ எடுத்ததாக பிரச்சனை ஏற்பட்டது என்றால் எட்டி பார்த்தாக தான் பிரச்சனை.குளிக்கும்போது எட்டி பார்த்ததாக தான் பிரச்சனை என்றால் சரிதான், ஆனால் அவ்வாறு எட்டிப்பார்க்க முடியாது.ஆஜர் எதிரி குட்டிராஜின் மகள் குளிக்கும்போது என் பேரன் அஸ்வின் செல்போனில் போட்டோ எடுத்ததாக காவல்நிலையத்தில் ஒரு புகார் கொடுக்கப்பட்டது என்றாலும் அதற்காக போலிசார் வீட்டை வந்து பார்த்தார்கள் என்றாலும் சரிதான், போலிசார் எதிரியிடம் நீங்கள் தான் பாத்ரூம்மை ஒழுங்காக கட்ட வேண்டும் என்று சொன்னார்கள்.

3)எதிரி தரப்பில் என் பேரன் புகைப்படம் எடுத்ததாக புகார் கொடுக்கப்பட்டது என்றாலும் போலிசார் பெண் பிள்ளை விவரம் என்பதால் வழக்கு பதிவு செய்யவேண்டாம் பாத்ரூம்மை ஒழுங்கான முறையில் கட்டி வையுங்கள் அறிவுறுத்தினார்கள் என்றால் சரிதான், ஆனால் என் பேரன் புகைப்படம் எடுக்கவில்லை யதார்தமாக தான எட்டிப்பார்த்துள்ளார்.மேற்படி சம்பவங்கள் நாங்கள் புகார் கொடுப்பதற்கு முன்பாகவே நடந்தது என்றால் சரிதான், நாங்கள் புகார் கொடுப்பதற்கு முன்பாக அவர்கள் புகார் கொடுத்துவிட்டார்கள்.சம்பவம் நடந்தவுடன் நான் புகார் மனுவோ புகார் வாக்குமூலமோ கொடுக்கவில்லை என்றால் சரிதான், நான் நேரடியாக மருத்துவமனைக்கு சென்றுவிட்டேன்.

4)நான் மருத்துவமனையில் இருந்ததால் என் கணவர் புகார் கொடுத்தார்.என் கணவர் புகார் மனுவாக கொடுத்தாரா புகார் வாக்குமூலமாக கொடுத்தாரா அதில் என்ன சொல்லப்பட்டிருந்தது என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான்.போலிசார் விசாரணையிலும் நான் முதல் விசாரணையில் சொன்ன விவரங்களை தான் சொன்னேனா என்றால் போலிசார் என்னை விசாரிக்கவில்லை.வழக்கு சம்பவம் நடந்ததாக சொல்லப்படுவத்கு முன்பு நான் கீழே விழுந்து எனக்கு காலில் காயம் ஏற்பட்டதா என்றால் இல்லை, நான் அது வரை கொத்தனார் வேலைக்கு சென்று கொண்டிருந்தேன்.

5)வழக்கு சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நேரத்தில் நானும் என் பேரனும் மட்டும் தான் இருந்தோம் என்றால் சரிதான்.சம்பவம் நடந்ததாக

சொல்லப்படும் நேரத்தில் பக்கத்து வீட்டுக்காரர்கள் அவர்களது வீட்டிற்குள் இருந்தார்கள் அதனால் சம்பவத்தை பற்றி வேறு யாருக்கும் தெரியாது. நான் சம்பவத்தை பற்றி என் கணவரிடம் தெரிவித்தேன்.

6)நான் சொன்ன மாதிரி நான் சொன்ன நேரத்தில் வழக்கு சம்பவம் நடைபெறவில்லை என்றாலும் நான் இரு சக்கர வாகனத்தில் இருந்து கீழேவிழுந்த காயத்தை பயன்படுத்தி என் பேரன் மீது புகார் கொடுத்துவிடுவார்கள் என்று பயந்த பின்னொரு தேதியில் என் கணவர் மூலமாக இந்த புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.நான் சொன்னது போல் எதிரி என்னை தாக்கி கெட்ட வார்த்தைகளால் பேசவில்லை என்றால் சரியல்ல.எதிரி என்னை தாக்கி காயம் ஏற்படுத்தவில்லை என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>**

இல்லை.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும்
குற்றவியல் நடுவர்,
ஓட்டப்பிடாரம்.